(6 pages) **Reg. No. : ..................................**

**Code No. : 7204** **Sub. Code : ZTLM 22**

M.A.(CBCS) DEGREE EXAMINATION, APRIL 2023.

Second Semester

தமிழ் – Core

இலக்கணம் II – தொல்காப்பியம் – சொல்

(For those who joined in July 2021 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

1. பலரறி சொல் என்பது ————————

(அ) பலர்பால் (ஆ) பலவின்பால்

(இ) ஒன்றன்பால் (ஈ) ஆண்பால்

2. முகிலினும் கரிய கூந்தல் ———————— வழக்கு

(அ) மங்கல வழக்கு (ஆ) தகுதிவழக்கு

(இ) இடக்கரடக்கல் (ஈ) வழூஉக்குறி

3. இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள் பாகுபாடுகள் எத்தனை

(அ) 25 (ஆ) 26

(இ) 27 (ஈ) 28

4. செய்தவனின் பெயர் அவனால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது

(அ) காரண ஆகுபெயர்

(ஆ) பண்பாகுபெயர்

(இ) கருத்தாவாகுபெயர்

(ஈ) இடவாகுபெயர்

5. உயர்திணைக்கு உரிய மெய்யீறுகள் ———————— ஆகும்

(அ) ச், ன், த், ப்

(ஆ) ன், ர், ல், வ்

(இ) ன், ற், ழ், ல்

(ஈ) ன், ர், ல், ள்

6. யான், யாம், நாம் என்பது

(அ) வினாப்பெயர்

(ஆ) தன்மை இடப்பெயர்

(இ) சுட்டுப்பெயர்

(ஈ) முன்னிலைப் பெயர்ச்சொல்



Nesamony Memorial Christian College, Marthandam

7. ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள், பல பொருளைக் குறித்து வரும் ஒரு சொல்.

(அ) இயற்சொல் (ஆ) திரிசொல்

(இ) திரைச்சொல் (ஈ) வடசொல்

8. "சுரையாழ அம்மி மிதப்ப வரையணைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

கானக நாடன் சுனை" - எவ்வகைப் பொருள்கோள்

(அ) நிரல்நிரைப்பொருள்கோள்

(ஆ) சுண்ணப்பொருள்கோள்

(இ) அடிமறி பொருள்கோள்

(ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்

9. எச்ச உம்மைச் சொல் உம்மையின்றி வந்தால் அது ________

(அ) எச்சம் (ஆ) செஞ்சொல்

(இ) முற்றும்மை (ஈ) தெரிநிலை

10. உரிச் சொற்கள் பெயரடையாகவும் வரும் எனக் கூறியவர் யார்?

(அ) அகத்தியலிங்கம்

(ஆ) ச.வே. சுப்பிரமணியம்

(இ) வீரமாமுனிவர்

(ஈ) பாலசுப்பிரமணியம்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) ஈற்றில் நின்று பாலுணர்த்தும் ஈறுகளுக்குச் சான்று தருக?

(அல்லது)

(ஆ) தகுதி வழக்கு இயல்பு வழக்கு பற்றி நீவிர் அறிவன யாவை?

12. (அ) நான்காம் வேற்றுமை உருப்பு ஏற்கும் பலபொருள்கள் யாவை?

(அல்லது)

(ஆ) விளி ஏற்கும் உயர்திணைக்குரிய பெயர்கள் யாவை?

13. (அ) முறைப்பெயர் வகைகள் யாவை? சான்றுடன் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) பெயரியலில் சொற்களின் இயல்பு குறித்து விவரி.

14. (அ) இலக்கணம் வரையறுக்கப்படாத சொல் வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) வினையெச்சம் வாய்ப்பாடுகள் தொல்காப்பியம், வழி விளக்குக.



[P.T.O.]

Nesamony Memorial Christian College, Marthandam

15. (ஆ) உம் இடைச்சொற்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இடக்கர்ச் சொல்லைக் கூறும் முறை மற்றும் இரத்தல் பொருளில் வரும் சொற்கள் யாவை?

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.

16. (அ) மரபு வழுவமைதி குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) ஐந்தாம் வேற்றுமையின் இலக்கணத்தையும் அதன் பாகுபாடுகளையும் விவரிக்க.

17. (அ) விளியேற்கும் பெயர்களையும் அவை விளியேற்கும் முறையினையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) ஆகுபெயரின் பாகுபாடுகளைத் தொல்காப்பியர் வழி நின்று விளக்குக.

18. (அ) இடைச்சொல்லின் பொது இலக்கணம் கூறி அதன் பாகுபாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உயர்திணை வினைகளின் வகைகளை விவரிக்க.



19. (அ) கடி எனும் பல்பொருள் உரிச்சொல் உணர்த்தும் பத்துப் பொருள்களை அட்டவணைப்படுத்து.

(அல்லது)

(ஆ) தொகைமொழிகள் வகைகள் குறித்து விளக்குக.

20. (அ) எச்சங்களின் வகைகள் கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) இலக்கணம் இக்கால மொழியலாளர் கருத்துகோளடு எவ்வாறு பொருந்துகிறது?

———————



Nesamony Memorial Christian College, Marthandam